[1987 நவம்பர் 13

என். ஆர். இ. பி. திட்டத்திற்கு மத்திய அரசு அளித்த தொகை.

93—(*வினா எண் 14937)—திரு. டி. ஆர். வேங்கடரமணன் மற்றும் திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

என். ஆர். இ. பி. திட்டத்திற்கு மத்திய அரசு 1981–82 முதல் 1986–87 ஆம் ஆண்டு வரை தமிழகத்திற்கு அளித்த தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு, 1981–82 முதல் 1986–87 ஆம் ஆண்டு வரை மைய அரசு தமிழகத்திற்கு அளித்த தொகை பின்வருமாறு :

ஆண்டு.	மைய அரசு அளித்த தொகை. (ரூபாய் இலட்சத்தில்.)
1981–82	1480.00
1982–83	1960.00
1983–84	1800.00
1984–85	2555.59
1985–86	1934.95
1986–87	1811.00

(முற்பகல் 10–30)

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த என். ஆர். ஈ. பி. திட்டத்தின் கீழ் மத்திய அரசு அளிக்கின்ற இந்தப் பணங்கள் எந்த இனங்களுக்கெல்லாம் செலவழிக்கப்படுகின்றன? சமீப காலத்தில் கிராமப்புறச் சாலைகள் எல்லாம் மோசமாக இருக்கின்ற சூழ்நிலையிலே, இந்தக் கிராமப்புறச் சாலைகளை என். ஆர். ஈ. பி. யிலே போடவேண்டும் என்று சொன்னால் அதைப்போடுவதற்கு விதிகள் இல்லை என்று சொல்கிறார்களே? ஏதாவது விதிகளில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா? அப்படி என்றால் இந்தச் சாலைகளைப் போடுவதையும் இந்த என். ஆர். ஈ. பி. திட்டத்திலே எடுத்துக் கொள்ள அரசு முன்வருமா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1987 நவம்பர் 13]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இரண்டு மூன்று திட்டங்கள் மத்திய அரசாலும், மாநில அரசினுடைய பங்குத்தொகைகளைப் பெற்றுக்கொண்டும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதிலே ஒவ்வொரு திட்டத்திற்கு ஒவ்வொரு அடிப்படைகள் நிர்ணயித்து செயல்பட்டு வரப்படுகிறது. இதிலே இந்தச் சாலைகள் போடுகின்ற திட்டம் இந்த என். ஆர். ஈ. பி. திட்டத்திலே சேர்க்கப்படாமல் வேறு திட்டத்திலே சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த திட்டத்தை பொறுத்தவரை நிலையான சொத்துக்கள் கிராமப்பகுதிகளுக்கு ஒரு சொத்தாக அமைந்து, அந்த கிராமப்பொருளாதாரத்தை உயர்த்தவேண்டும் என்ற அடிப்படையில் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. அதுவும் ஆண்டுக்கு ஒரு முறை இது மறு பரிசீலனை செய்யப்பட்டு அவ்வப்போது எந்தெந்த திட்டங்களுக்குச் செலவிடப்படலாம் என்கின்ற இந்த குறிக்கோளும் நிர்ணயிக்கப்படுகிறது. அந்த வகையில் இந்த திட்டத்திலே, இந்தச் சாலைகளை போடுவதற்கான அந்தச் செலவை செய்ய முடியுமா என்பது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த என். ஆர். ஈ. பி. திட்டத்தின் கீழ் 1981 லிருந்து 1987 வரை எத்தனை நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது ? அதோடு இந்தத் திட்டத்தின் கீழ் சமுதாயக் கூடங்களும், சத்துணவுக் கூடங்களும் கட்டப்பட்டிருக்கின்றனவா ? அப்படிக் கட்டப்பட்டிருக்கின்றனவென்றால் எத்தனை சமுதாயக் கூடங்களும், எத்தனை சத்துணவுக் கூடங்களும் கட்டப்பட்டு இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதைத் தனியாக அவர்கள் கேள்வியாகப் போட்டால் விரிவான பதிலைச் சேகரித்துத் தரமுடியும்.

திரு. க. இரா. சின்னராசு : தலைவர் அவர்களே, என். ஆர். ஈ. பி. திட்டத்தின் கீழ் மத்திய அரசிடமிருந்து வருகின்ற இந்த நிதி பணமாக வருகிறதா, அரிசியாக வருகிறதா, கோதுமையாக வருகிறதா என்பதை அறிவதோடு இந்த மானியத்தில் மாநில அரசினுடைய பங்குத் தொகை உண்டா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டப் பணிகளுக்கு ஆகும் செலவை(Cash Funds)மைய அரசும், மாநில அரசும் சமமாக பகிர்ந்து கொள்கின்றன. இந்த நிதி ஒதுக்கீடு தவிர, மைய அரசு கோதுமையும், அரிசியும் இலவசமாக வழங்குகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS